Printed Matter

MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only

# மலங்கரை கத்தோலிக்க பொதுநிலையினர் தினம்

மே 1



To

BOOK POST

If Undeliveried please return to ...
Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165
Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

# Bulletin

## Diocese of Marthandam

## மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



மே 18

# ஆண்டவரின் விண்ணேற்றம்

மலர் 20 மே 2023 இதழ் 05

## இம்மாதம் நினைவு கூர

மேய் 2023

1 – தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித யோசேப்பு
இறைவாக்கினர் எரேமியா

1


2 – அலெக்ஸ்ஸாண்டிரியாயின் மார் அத்தனாசியோஸ்
6 – நேர்மையாளர் யோபு
புனித டொமனிக் சாவியோ
7 – உயிர்ப்புக்குப்பின் நான்காம் ஞாயிறு
நம் ஆண்டவர் இயேசுவின் சிலுவை கண்டெடுத்த நாள்
மலங்கரை கத்தோலிக்க பொதுநிலையினர் தினம்

6


8 – திருத்தூதரான மார் யோவான்
9 – இறைவாக்கினர் எசாயா
10 – ஆர்வலராகிய திருத்தூதர் மார் சீமோன்
11 – சுலாவாய் இனத்தவரின் மார் சிறில் மற்றும் மெத்தோடியோஸ்
12 – சைப்ரசின் மார் எப்பிப்பானியோஸ்
நிசிபிஸ் ஆயரும் மல்ப்பானுமாகிய மார் யாக்கோபு
13 – அந்தியோக்கியாளர் மார் ஈசாக் மல்பான்
14 – உயிர்ப்புக்குப்பின் ஐந்தாம் ஞாயிறு
மார் ஆதாயி
15 – கதிர்களை முன்னிட்டு தூய இறையன்னையின் நினைவு
மார் பக்கோமியோஸ்
18 – சூலோக்கோ (நம் ஆண்டவரின் விண்ணேற்றம்)
20 – நான்கு நற்செய்தியாளர்கள்
21 – உயிர்ப்புக்குப்பின் ஆறாம் ஞாயிறு
புனித ஹெலனாள்

18


22 – புனித றீத்தா
25 – புனித சோபியா
26 – புனித பிலிப் நேரி
28 – பெந்தக்கோஸ்துப் பெருவிழா
இறை அழைத்தல் தினம்
29 – புனித தியோடோசியா
30 – கேசரியா நகரின் புனித எவுசேபியஸ்
தோமஸ் மார் எவுசேபியஸ் ஆண்டகையின் பெயர்விழா
ஆர்க் நகரின் புனித யோவான்
31 – திருத்தூதர் மார் யாக்கோபு முதல் திருப்பலி ஒப்புக்கொடுத்ததன் நினைவு



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

MARTHANDAM DIOCESAN BULLETIN

TO SERVE THE LORD AND HIS PEOPLE

மலர். 20 மே 2023 இதழ். 5

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

## BULLETIN OF THE
## DIOCESE OF MARTHANDAM

*PATRON*

***His Excellency Most Rev. Vincent Mar Paulos***

*EDITOR*

***Rev. Fr. Franklin Jose***

***The Chancellor***

*COVER DESIGN*

***Mrs. Uni Kumari B.***

*PRINTING*

***Santhom Press,***

***Marthandam***

*PUBLISHED BY*

***The Chancellor***

***Diocese of Marthandam***



இறையருளினாலும் திரு ஆட்சிபீடத்தின் அனுகூலத்தாலும்
மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் ஆயர் பேரருட்
பெருந்தகை **வின்சென்ட் மார் பவுலோஸ்**
ஆண்டகையிடமிருந்து தம் ஆளுகைக்
குட்பட்ட அனைத்து குருக்களுக்கும்
துறவிகளுக்கும் இறைமக்கள்
அனைவருக்கும்
ஆசீர்.

Pro. No. EPL 1/2023 07.04.2023

***கிறிஸ்துவுக்குள் பிரியமான குருக்களே, துறவியரே, அன்பு இறைமக்களே!***

**உயிர்ப்பு என்னும் மங்களவார்த்தை**

இயற்கை ஓய்வு கொள்ளும் இரவில், இயேசு ஆண்டவர் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார். சிலுவையில் உயிர் விட்ட இயேசுவை கண்டவர்கள் அவரின் இறுதி ஊர்வலத்தோடு எல்லாம் முடிந்தது என நினைத்தார்கள். இயேசுவின் நண்பர்களும் எதிரிகளும் கல்லறைக்கு பெரிய கல் வைத்து மூடி இயேசுவின் வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைத்து திரும்பினர். மண்ணில் பிறந்தவர்கள் எல்லாம் இறந்து மண்ணோடு மண்ணாக மட்கிப்போவார்கள் என்ற இயற்கை தத்துவத்தின் வெளிப்பாடே இம்மானிட செயல். மண்ணில் உதித்ததானால் அவர் சரசாரி மனிதரல்ல, சரித்திரத்தையே புரட்டிப்போட்ட கடவுளின் மகன். மூன்று ஆணிகளில் அறையப்பட்டவர் மூன்றே நாளில் உயிர்ப்பு செய்தியை உலகிற்கு உணர்த்தியவர். கிறிஸ்துவின் உயிர்ப்பு கிறிஸ்தவத்தின் பிறப்பானது.

உயிர்ப்பு நம்பிக்கையின் பிறந்தநாள். இயேசுவின் உயிர்ப்பே நமது இறைநம்பிக்கையின் மூலம். இல்லையேல், புனித பவுல் கூறுவதுபோல

நாம் கொண்டிருக்கும் இறைநம்பிக்கை பயனற்றதே. நாம் இன்னமும் நமது பாவங்களில் வாழ்பவர்களாவோம் (1கொரி 15:17). இயேசுவின் உயிர்ப்பு பாவத்தின் தலையை நசுக்கியது. பாவத்தினால் எற்படும் அனைத்து தீமைகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்தது. இந்த மாபெரும் வெற்றியினால் எற்படும் நிறைவு மானிடர் அனைவருக்கும் எப்போதும் உண்டு. கிறிஸ்துவின் உயிர்ப்பு ஒரு சாதாரண நிகழ்வு அல்ல, மானிட புரிதலுக்கு எளிதில் விளங்குவதும் அல்ல. நம்பிக்கை என்னும் திறவுகோலால் மட்டுமே இதை புரிந்துக்கொள்ள முடியும். "நம்பிக்கைக் கொள்ளாதோர் இம்மாபெரும் மறைபொருளை புரிந்துக் கொள்வதில்லை" என்று தூய அகஸ்தினாரும் விவரிக்கிறார். சுருங்க கூறின், நம்பிக்கை தளத்தில் மட்டுமே உயிர்ப்பை தெளிவாக புரிந்துக்கொள்ள முடிகிறது. சான்றுகளை மையப்படுத்தி அல்ல, மாறாக சாட்சியங்களை மையப்படுத்தி நம்பிக்கைக் கொள்ள வேண்டிய ஒன்றே உயிர்ப்பு. நற்செய்தியில் வெற்றுக்கல்லறை உயிர்ப்பின் மௌன சான்றாக நிலைக்கொள்கிறது. ஆனால் இச்சான்று பயத்தையும் குழப்பத்தையும் உருவாக்கியது. கிறிஸ்தவத்தை விளக்கிச் சொன்ன பவுலடியாரும் உயிர்ப்புக்கான சான்றுகளை பட்டியலிடவில்லை, மாறாக சீடர்களின் சாட்சியங்களை வரிசைப்படுத்துகிறார். "...கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். மறைநூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பட்டார். பின்னர் அவர் கேபாவுக்கும் அதன் பின் பன்னிருவருக்கும் தோன்றினார்...'' (1கொரி 15:3-5). சுருங்க கூறின், நற்செய்தி மற்றும் திருமுகங்களில் இயேசுவின் உயிர்ப்பு விளக்கித் தரப்படவில்லை, மாறாக முழக்கமிட்டு அறிவிக்கப்படுகிறது.

உயிர்ப்பு என்னும் மங்களவார்த்தை பெண்களில் மகிழ்ச்சியையும் பயத்தையும் உருவாக்கியது (மத் 28:8). அச்சமும் மகிழ்ச்சியும் இணைந்து போவதில்லை. அச்சமுள்ள இடத்தில் மகிழ்ச்சியும் மகிழ்ச்சியுள்ள இடத்தில் அச்சமும் இருப்பதில்லை. இங்கே நம்பிக்கைக்கும் நம்பிக்கையின்மைக்கும் இடையே போராட்டம் நடைபெறுகிறது. நம்பிக்கையின்மை அச்சத்தையும் நம்பிக்கை மகிழ்ச்சியையும் வெளிப்படுத்துகிறது. உயிர்ப்பில் நம்பிக்கையை பதிய வைத்தபோது அவர்கள் திடன் பெற்றனர். கிறிஸ்து சீடராக வாழும் நம்மில் இப்போராட்டம் நடைபெறுகிறது. இன்றைய சமூக சூழலில்



நமது நம்பிக்கையை சோதிக்கும் சூழல்கள் ஏராளம் ஏராளம். இச்சூழல்களிலெல்லாம் உயிர்த்த இயேசுவில் நம்பிக்கையை பதிய வைத்து திடன் பெற்று வாழ்வோம்.

கடவுளின் கட்டளையை மீறி பாவத்தில் வீழ்ந்த மனிதனை மீட்பதற்காக மீட்பர் ஒருவர் வாக்களிக்கப்பட்டார். அதுவே முதல் மங்களவார்த்தை. கடவுள் மனிதரான மாபெரும் நிகழ்வை வார்த்தையாக மரியா என்னும் மாசற்ற பெண்மணிக்கு கபரியேல் தூதரால் வழங்கப்பட்டது. செய்தி முதலில் அதிர்ச்சியையும் பின்னர் அற்பண மனநிலையையும் கொடுத்தது. இப்பொழுது வானதூதர்கள் இயேசுவின் உயிர்ப்பை வெற்றி செய்தியாக பெண்களுக்கு அறிவிக்கிறார்கள். இதுவும் மங்கள வார்த்தையே. சிலுவையில் அறையுண்ட இயேசு உயிருடன் எழுப்பப்பட்டார் என்ற செய்தி வெற்றியின், மகிழ்ச்சியின் மங்களாமான செய்தி. பெண்களை சந்தித்த வானதூதர்கள் கூறிய ஒரே செய்தி அவர் கல்லறையில் இல்லை அவர் உயிர்த்துவிட்டார் என்பது தான்.

உயிர்ப்பின் செய்தியை பெற்றுக்கொண்ட பெண்களுக்கு ஒரு பணியும் வழங்கப்படுகிறது. அதாவது உயிர்ப்பு செய்தியை அறிவிக்க வேண்டும் (மாற் 16:7). விண்ணேற்றம் வரை தொடர்ந்த உயிர்த்தெழுந்த இயேசுவின் பத்து காட்சிகளை புனித அகஸ்தினார் சுட்டிக்காட்டுகிறார். 1. கல்லறையை அடைந்த பெண்களுக்கு 2. கல்லறையை விட்டுச்சென்ற பெண்களுக்கு 3. பேதுருவிற்கு 4. எம்மாவூஸ் சென்ற சீடர்களுக்கு 5. திருத்தூதர் தோமா இல்லாத சீடர்குழுவிற்கு 6. திபேரியா கடற்கரையில் 7. கலிலேயா கடற்கரையில் 8. உணவு மேசையில் 9. திருத்தூதர் தோமா உட்பட்ட சீடர்களுக்கும் 10. விண்ணேற்ற வேளையில். இந்த காட்சிகளில் எல்லாம் உயிர்த்த இயேசு தான் விரும்பியவாறு தமது சீடர்களுக்கு தோற்றமாளித்து அவர்களது இறை நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றார்.

உயிர்த்த இயேசு எந்த மக்கள் கூட்டத்தின் முன்னும் காட்சியளிக்கவில்லை மாறாக தன்னுடைய பணிவாழ்வில் பங்கேற்றவர்களுக்கு காட்சியளிக்கிறார். இயேசு இறந்து உயிர்த்தார் என்று சான்று பகிர அவர்களுக்கு மட்டுமே இயலும். தூய பேதுருவும் இதனை தெளிவுப்படுத்துகிறார். "ஆனால் கடவுள் அவரை மூன்றாம்

நாள் உயிரோடு எழுப்பிக் காட்சி அளிக்கச் செய்தார். ஆயினும் அனைத்து மக்களுக்குமல்ல, சாட்சிகளாகக் கடவுள் முன் தேர்ந்துகொண்டவர்களுக்கு மட்டுமே அவர் காட்சியளித்தார்..." (திப. 10:40-41). இந்த சிறுமந்தையை ஆற்றல்படுத்தவும் ஊக்கப்படுத்தவும் நாற்பது நாட்களை தேர்ந்துக்கொண்டார். பெரும் கூட்டத்தால் அல்ல துணிவுள்ள ஒரு சிறுமந்தை வாயிலாக கிறிஸ்து உயிர்த்தார் என்ற உண்மைக்கு சான்று பகிரப்படுகிறது.

பாடுகளில் தொடங்கிய பயணம் உயிர்ப்பின் மாட்சியை அடையும் போது உயிர்த்த ஆண்டவரின் உடலில் ஆணிகளால் துளைக்கப்பட்ட காயங்கள் இருந்தது. இக்காயங்கள் பாடுகள் ஏற்ற சரீரத்தையும் மாட்சி நிறைந்த உடலையும் ஒன்றுப்படுத்துகிறது. நம்ப தயங்கி நின்ற திருத்தூதர் தோமாவிற்கு கிறிஸ்துவின் மாட்சிமிகு உடலில் காண்பட்ட காயங்களே காட்டப்பட்டன. காயத்தழும்புகள் உடலில் காண்பது குறையாக கருதப்படவில்லை. அது மாட்சிமையாக கருதப்படுகிறது. அவை மாட்சிப்படுத்தப்பட்ட அன்பின் அடையாளங்கள். சிலுவையில் அறையுண்ட இயேசுவின் உடலே உயிர் பெற்று எழுப்பப்பட்டது என்பதன் அழியாத அடையாளமே இந்த காயங்கள். பாடுகளின் தழும்புகள் இல்லாத உயிர்த்த இயேசுவை விரும்புபவர்கள் சிலுவையின் வழியில் நடக்காமல் உயிர்ப்பின் வழியில் நடக்க விரும்புகிறவர்கள் ஆவர். தொடக்க திருஅவையில் மக்கள் ஒருவருக்கொருவர் ஆண்டவர் உயிர்த்தெழுந்தார் என கூறி வாழ்த்தினர் (லூக். 24:33-34). சிலுவையின் வழியில் பயணிப்பவர்களுக்கு மட்டுமே உயிர்ப்பின் மாட்சியை நினைத்து அல்லேலூயா துதிபாட முடியும். கடவுளின் திருமகன் தந்தையிடம் மனித குலத்திற்காக இரக்கம் வேண்டி மன்றாடும் போதும் காயத்தழும்புகள் பேசத்தொடங்கும்.

அதாவது உயிர்த்த இயேசு இனி ஒரு குறிப்பிட்ட மக்களுக்கோ அல்லது குறிப்பிட்ட புவியியல் எல்லைகளுக்கு மட்டுமோ உட்பட்டவர் அல்ல. மாறாக அனைவருக்கும் குறிப்பாக படைப்பனைத்திற்கும் உரியவர். இம்மாபெரும் உண்மையை சீடர்கள் நானிலமெங்கும் எடுத்துச்செல்ல வேண்டும் எனவே உயிர்ப்பு என்பது மானிடர் அனைவருக்கும், ஏன் படைப்பு அனைத்திற்கும் உரித்தான ஒரு மாபெரும் நிகழ்வு (உரோ 8:20-23). ஆகவே மானிட குலம்



புதுவாழ்வை அனுபவமாக்கும் நற்செய்தியாக உயிர்ப்பு என்னும் மங்களவார்த்தை நிலைக்கொள்கிறது.

சீடர்களின் வாழ்வில் உயிர்ப்பு மாபெரும் மாற்றத்தை உருக்கொடுத்தது. இயேசுவை மறுதலித்த பேதுருவின் நிலையை பார்ப்போமானால், "நீர் சொல்வது என்னவென்று எனக்கு தெரியவில்லை" (மத் 26:70), "இம்மனிதரை எனக்கு தெரியாது" (மத் 26:72) என்று அச்ச உணர்வோடு சொன்னவர், இயேசுவின் உயிர்ப்புக்கு பின் "என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது" (திப 4:20) என்று சொன்னார். எந்த யூதர்களை பார்த்து பயந்து இயேசுவை மறுதலித்தாரோ, அதே யூதர்களை பார்த்து "நீங்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்தீர்கள். ஆனால் கடவுள் இறந்த அவரை உயிருடன் எழுப்பினார். இந்த இயேசுவே, கட்டுகிறவர்களாகிய உங்களால் இகழ்ந்து தள்ளப்பட்ட கல். ஆனாலும் முதன்மையான மூலைக்கல்லாக விளங்குகிறார்" (திப 4:10-11). சுருங்ககூறின், இயேசுவின் பாடுகளை கண்டு பல திசைநோக்கி ஓடிய சீடர்களின் வாழ்வில் மாற்றங்கள் ஏற்பட செய்து, அவர்களை ஒன்றிணைத்து உயிரோட்டம் அளித்தது இயேசுவின் உயிர்ப்பே.

இன்றைய உலகம் அச்சத்தை உருவாக்கினாலும் கிறிஸ்துவின் நம்பிக்கைக் கொண்ட நாம் சிலுவையின் வழியில் பயணித்து உயிர்ப்பின் மாட்சியை பெறுவோம். உயிர்த்த ஆண்டவரின் உடனிருப்பு நமக்கு புதுவாழ்வை தருகிறது. கிறிஸ்துவுடன் இணைந்து புதுவாழ்வுப் பெற்று இணைந்து பயணிப்போம். உயிர்ப்புக்கு சாட்சிகளாக மாறுவோம்.

மனிதர்களின் கேள்விக்கு விடையாக உயிர்ப்பு இல்லை...
மானிட குலத்தை கேள்வி கேட்கும் இறைச்செயலே உயிர்ப்பு...

இறையாசீர் உங்களோடு தங்குவதாக.

*அன்புடன்,*



**† மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்டம்

## மேதகு ஆயர் லாரன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகை அவர்களின் நினைவு திருப்பலி

மார்த்தாண்டம் மறைமாவட்ட முதல் ஆயர் மறைந்த மேதகு ஆயர் லாரன்ஸ் மார் எப்ரேம் அவர்களின் நினைவு பாதையாத்திரை ஏப்ரல் மாதம் 11-ம் தியதி காலை 6.30 மணிக்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் தலைமையில் மார் எஃப்ரேம் நகர் வெள்ளெலும்பு பங்குதந்தை மற்றும் மார்த்தாண்டம் மறைமாவட்ட MCA இயக்குநர் அருட்தந்தை றாபின்சன் ஆகியோர்கள் இணைந்து காலை செபம், திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்கள். காலை 8.45 மணிக்கு மேதகு ஆயர் அவர்கள் திருச்சிலுவையை அர்ச்சித்து MCA தலைவரிடம் வழங்கி பாதை யாத்திரையை தொடங்கி வைத்தார்கள். பின்குளம் பகுதிவரை வாகனங்களில் பாதையாத்திரையாக இறைமக்கள் பயணம் செய்தார்கள். காலை 10.15 மணிக்கு பாதையாத்திரையானது பின்குளம் வந்தடைந்தது. அங்கிருந்து நடைபயணமாக குழிஞ்ஞான்விளை, ஊரம்பு, சூழால், அம்பிலிக்கோணம், களியக்காவிளை, படந்தாலுமூடு வழியாக மதியம் 1.20 மணிக்கு குழித்துறை மார் எஃப்ரேம் வளாகம் வந்தடைந்தது. மதிய உணவிற்கு பின்னர் சுமார் பிற்பகல் 3.30 மணியளவில் பாதையாத்திரையை மேதகு ஆயர் அவர்கள் தலைமையேற்று வழிநடத்தினார்கள். சுமார் மாலை 5.30 மணியளவில் மார்த்தாண்டம் பேராலயம் வந்தடைந்தது. பின்னர் ஆயர் லாரன்ஸ் மார் எஃப்ரேம் அவர்களின் நினைவு இடத்தில் மேதகு ஆயர் அவர்கள் தூப மன்றாட்டுடன் நினைவு பாதை யாத்திரை நிறைவு பெற்றது. இதில் மறைமாவட்ட, குருகுல முதல்வர், மறைமாவட்ட செயலர், மறைமாவட்ட நிதி அலுவலர், அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள் மற்றும் இறைமக்கள் கலந்துகொண்டனர். 12-ம் தியதி காலை மேதகு ஆயரின் நினைவு திருப்பலியை பெத்தேரி ஆயர் மற்றும் நமது மறைமாவட்ட ஆயர், குருகுல முதல்வர், மற்றும் அருட்தந்தையர்கள் இணைந்து கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்தார்கள். திருப்பலிக்குப்பின் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அருட்தந்தையர்கள் சார்பாக பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்களும் பொது நிலையினர் சார்பாக திரு. வர்க்கீஸ் பனச்சமூடு அவர்களும் நினைவுரை வழங்கினார்கள். பின்பு நமது ஆயர் அவர்கள் பேரருட்தந்தை வர்கீஸ் மற்றும் பேரருட்தந்தை பிறேம்குமார் ஆகியோரை மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் புதிய கோர்எப்பிஸ்கோப்பா பதவிபெயர் அறிவித்தார்கள். பின் மேதகு ஆயர் லாரன்ஸ் மார் எஃப்ரேம் அவர்களின் நினைவலைகள் பற்றிய புத்தகமும், அருட்தந்தை மரியஜாண் எழுதிய புத்தகங்களும் வெளியிடப்பட்டன. பின்பு ஆயர் அவர்களின் நினைவிடத்தில் தூப மன்றாட்டும் மற்றும் அன்பின் உணவுடன் அன்றைய நிகழ்வுகள் நிறைவடைந்தன.



## பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை ஜீன் ஜோஸ்
மேய் 08



அருட்தந்தை ஷாஜி கிறிஸ்டோ
மேய் 09

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

### மரியன் இயக்கம் சிறு தொழில் கடனுதவி

மரியன் திட்ட உறுப்பினர்களுக்கு ஆண்டு தோறும் சிறு தொழிலகள் செய்ய கடன் உதவி வழங்கப்பட்டு வருகிறது. 20.03.2023 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் தலைமையில் உதவி தொகை வழங்கப்பட்டது. உறுப்பினர்கள் தாங்கள் திட்டமிட்ட தொழில்களை சிறப்பாக செய்து முன்னேற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. மொத்தம் 161 உறுப்பினர்களுக்கு ஒரு உறுப்பினருக்கு ரூபாய் 15,000/- வீதம் 24,15,000/- ரூபாய் கடனாக வழங்கப்பட்டது.

### வழிகாட்டுதல் பயிற்சி

தளிர்கள் உலக திட்டத்தின் கீழ் 12 -ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவ மாணவிகளுக்கான வழிகாட்டுதல் பயிற்சியானது 12.04.2023 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் பயிற்சியினை துவங்கி வைத்து தலைமையுரை யாற்றினார்கள். பின்னர் அருட்தந்தை ஷிஜு ஜோஸ் அவர்கள் மாணவர்கள் வித்தியாசமான யுக்திகளை கையாண்டு நன்கு படித்து வெற்றியாளர்களாக திகழ வேண்டும் என்று வாழ்த்தினார்கள். பின்னர் மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியின் பேராசிரியர் திரு. லலின் அவர்கள் மாணவர்களுக்கு பல்வேறு வெற்றியாளர்களின் வாழ்க்கை வரலாறுகளை எடுத்து காட்டி, வெற்றியாளர்களாக திகழ எவ்வாறு கடினமாக உழைக்க வேண்டும் என்றும் பயிற்சி அளித்தார்கள். தொடர்ந்து பேராசிரியர் வியோ பிறைட் சிங் அவர்கள் மேற்படிப்புக்கான பல்வேறு துறைகள், அவற்றிற்கான வேலை வாய்ப்புகள், நுழைவு தேர்வுகளின் வகைகள் மற்றும் அவைகளின் விரிவாக்கங்கள் ஆகியவை குறித்து மாணவர்களுக்கு புரியும் விதத்தில் மிகவும் தெளிவாக பயிற்சியளித்தார்கள். இப்பயிற்சியின் வழியாக மாணவர்கள் தங்கள் எதிர்கால கனவுகளை நனவாக்க எந்தெந்த துறைகளை தேர்ந்தெடுத்து படிக்க வேண்டும் என்ற நல்லதொரு தெளிவு கிடைத்ததாக கருத்து தெரிவித்தனர். அத்துடன் மாணவ மாணவிகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களின் சந்தேகங்களுக்கும் விளக்கங்கள்



அளிக்கப்பட்டன. பின்னர் மாலை 3.30 மணியளவில் பயிற்சியானது முடிவுற்றது. இப்பயிற்சியில் 62 மாணவ மாணவிகள் கலந்து கொணடு பயன்பெற்றனர்.

### உதவித்திட்டங்கள்

1. 20.03.2023 அன்று பார்மஸி 777 கல்வி கடன் உதவி திட்டத்தின் வழியாக உயர்கல்வி பயிலும் 25 மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 5,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

2. 20.03.2023 அன்று டிவைன் மெர்சி கல்வி கடன் உதவி திட்டத்தின் வழியாக உயர் கல்வி பயிலும் 14 மாணவ மாணவிகளுக்கு ஒரு மாணவருக்கு ரூபாய் 25,000/- வீதம் மொத்தம் ரூபாய் 3,50,000/- கடனாக வழங்கப்பட்டது.

3. 20.03.2023 அன்று தலித் மக்களின் மேம்பாட்டிற்காக அந்த திட்டத்தில் உள்ள 58 உறுப்பினர்களுக்கு நபருக்கு ரூபாய் 10,000/- வீதம் மொத்தம் 5,80,000/- கடனாக வழங்கப்பட்டது.

4. 21.03.2023 அன்று கோல்பிங் இந்தியா சார்பாக சிறு தொழில் செய்வதற்காக கோல்பிங் குடும்பங்களில் உள்ள 10 உறுப்பினர்களுக்கு ரூபாய் 10,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

5. 10.04.2023 அன்று மிட்ஸ் ஜீவன் திட்டத்தின் வழியாக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 18 உறுப்பினர்களின் மருத்துவ செலவிற்கு நபருக்கு ரூபாய் 5000/- வீதம் 76,000/- ரூபாய் வழங்கப்பட்டது.

### பிற நிகழ்வுகள்

1. 12.04.2023 மற்றும் 13.04.2023 ஆகிய தினங்களில் கோட்டார் சமூக பணி மையத்தில் வைத்து குழந்தைகளின் உரிமைகள் அதன் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் குழந்தைகளின் நலன் சார்ந்த அரசு திட்டங்களும் என்ற தலைப்பில் திறன் வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியல் CTWWC திட்டத்தின் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

2. 27.03.2023 அன்று மிட்ஸ் பணியாளர்களுக்கான அரை நாள் தியானம் அருட்தந்தை சிபி அவர்களால் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த தியானத்தில் மிட்ஸ் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

3. 13.04.2023 முதல் மிட்ஸ் சுய உதவி குழுக்களுக்கான தணிக்கையானது மிட்ஸ் பணியாளர்களால் கிளஸ்டர் வாரியாக நடைபெற்று வருகிறது.

## HEALTH FOR ONE MILLION (HOM)

**Diocese of Marthandam**

தமிழ்நாடு ஆயர் பேரவையின் நலவாழ்வு மேம்பாட்டு ஆணையம் மற்றும் HOM சார்பாக ஏப்ரல் 16-ம் தியதி செல்லங்கோணம் புனித ஜார்ஜியார் ஆலயத்தில் வைத்து நடைபெற்ற நமது இதயம் காப்போம் என்ற சிறப்பு நிகழ்வில், தக்கலை மறைமாவட்ட ஆயரும், தமிழ்நாடு ஆயர் பேரவையின் நலவாழ்வு மேம்பாட்டு ஆணைய தலைவருமான மேதகு ஆயர் மார் ராஜேந்திரன் அவர்கள் தலைமையில் சிறப்பு திருப்பலியும், தமிழ்நாடு ஆயர் பேரவையின் நலவாழ்வு மேம்பாட்டு ஆணைய செயலர் அருட்சகோதரி ஜோஸ்பின் அவர்களால் நமது இதயம் காப்போம் என்ற தலைப்பில் விழிப்புணர்வு கருத்துரையும் நடைபெற்றது. பின்னர் சுரேஷ் கண்மருத்துவமனை சார்பாக இலவச கண் மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெற்றது. இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை HOM இயக்குநர் அருட்தந்தை ராபர்ட், செல்லங்கோணம் புனித ஜார்ஜியார் ஆலயத்தின் பங்குபணியாளர் அருட்தந்தை ஜெனிற்றோ மற்றும் பங்கு பேரவை உறுப்பினர்கள் செய்தனர்.

மார்த்தாண்டம் மறைமாவட்ட நலவாழ்வு அமைப்பான HOM சார்பாக ஏப்ரல் மாதம் 52 நோயுற்ற முதியோர்களுக்கு ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கப்பட்டது. மேலும் தாய் சேய் நலத்திட்டம் சார்பாக 30 கற்பிணி பெண்களுக்கு சத்து மாவு வழங்கப்பட்டது.

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் கீழ்இயங்கும் மார்த்தாண்டம் மெடிக்கல் மிஸன் சார்பாக பேதுருவின் கரங்கள் என்னும் மாதாந்திர மருத்துவ உதவித் திட்டம் செயல்பட்டு வருகிறது தற்போது 42 நிரந்தர நோயாளிகளுக்கு மாதம் 1000 ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. ஆகஸ்ட் மாதத்திற்குரிய உதவித்தொகை 20.04.2023 அன்று HOM அலுவலக வளாகத்தில் வைத்து வழங்கப்பட்டது.



# மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி இலவுவிளை

**வணிக மேலாண்மை துறையின்** Gwani '23

மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியின் வணிக மேலாண்மை துறையின் சார்பாக 27.04.2023 அன்று Gwani '23 கல்லூரிகளுக்கு இடையிலான போட்டிகள் காலை 9.30 மணிக்கு Very Rev. Fr. ஜோஸ்பின் ராஜ் அவர்கள் தலைமையில், நம் கல்லூரி இயக்குநர் Dr. N. ஆஸ்டின்அவர்கள் முன்னிலையில் தொடங்கியது. சிறப்பு விருந்தினராக Mrs. ஜெறினா பப்பி (MSME., DFO திருநெல்வேலி) அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களை ஊக்குவித்தார். அரசு, மாணவர்களின் புதுமையான படைப்புகளுக்கு என்னென்ன நிதி உதவிகள் வழங்குகிறது என்பது பற்றியும், MBA Course மாணவர்களின் வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியம் என்பதை பற்றியும் சிறப்புரை ஆற்றினார்.

Paper presentation, Quiz, Ideathon, Brand Raise, Best Manayer, Westrn Dance ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. 18 கல்லூரிகளிலிருந்து 200 -க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அலெக்ஸாண்டர் கிரஹாம்பல் அவர்களுடைய வாழ்க்கையை எடுத்துக்காட்டி அருட்தந்தை ஜோஸ்பின் அவர்கள் தலைமை உரை ஆற்றினார். இயக்குநர் Dr. N. ஆஸ்டின் அவர்கள் Gwani '23 -ன் துவக்க உரை ஆற்றினார்.

பின்பு Valedictory function நடத்தப்பட்டது. அதில் சிறப்பு விருந்தினராக Mr. (Founder & MD Kumari Shoppy) அவர்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்கு ஊக்க உரை நிகழ்த்தினார்.

வெற்றிபெற்ற மாணவர்களுக்கு Cash Prize மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. Gwani '23-ன் Sponsors-ம் கௌரவிக்கப்பட்டனர். பின்னர் 4.30 மணியளவில் Gwani '23 இனிதே முடிவடைந்தது.

# மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரி கிராத்தூர்

**செய்முறைத் தேர்வு**

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் 2021-2023-ம் ஆண்டிற்கான மாணவர்களுக்கான செய்முறைத் தேர்வானது 8. 03.2023 முதல் 9.03.2023 ஆகிய இரண்டு தினங்கள் நடைபெற்றது. இதனை தமிழ்நாடு கல்வியியல் கல்லூரியிலிருந்து வருகை புரிந்த உதவிப் பேராசிரியர். முனைவர். தேன்மொழி (Convener), இணைப்பேராசிரியர். விஜயராகவன் (Member) ஆகியோர் இந்த செய்முறைத் தேர்வினை நடத்தினர்.

**பெண்கள் தினவிழா**

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் பெண்கள் தினவிழாவானது கல்லூரி வளாகத்தில் 10.03.2023 அன்று ஆண் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து பெண்கள் தினவிழாவினை வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டது.

**பெண்கள் தினவிழா கலைப்போட்டிகள் (Femella Azionare 2023)**

கிராத்தூர், மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரியில் பெண்கள் தினவிழாவினை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகின்ற (Femella Azionare) விழாவானது இந்த ஆண்டும் மார்ச் 30-ம் தேதி நடத்தப்பட்டது. இந்த கலைவிழா போட்டிகளை முதல்வர். அருட்சகோதரி. ராணிசேவியர் DM மார் கிரிகோரியோஸ் மெட்ரிக் பள்ளி, கிராத்தூர் அவர்கள் துவக்கவுரையாற்றி விழாவினை துவக்கி வைத்தார். இப்போட்டிகளில் 16 கல்லூரிகளில் உள்ள மாணவிகள் பங்கேற்றனர். பரிசு தொகுப்புகள் முதல் பரிசு தொகை ரூபாய் 5000/- பெத்லகேம் கல்லூரி வென்றது. இரண்டாம் பரிசுத் தொகை ரூபாய். 4000/- மரியாகிரி கல்லூரி இ மூன்றாம் பரிசு ரூபாய். 3000/- அரசு கலைக்கல்லூரி, கோணம். பரிசுகளை வென்றது. மேலும் போட்டிகளில் வென்ற மாணவா;களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

**Students Orientation**

கிராத்தூர், நமது கல்வியியல் கல்லூரியில் 12.04.'23 அன்று மாணவர்களை சந்திக்க மிகப்பெரும் மரியாதைக்குரிய ஆயர். Dr. ஜோஸப் மார் தோமஸ் (Catholic Diocese of Sulthan Bethary & Chairman) வருகை புரிந்தார். அவர் மாணவர்களுக்கு 21-ம் நூற்றாண்டின் திறன்கள் அமெரிக்காவில் பயன்படுத்தும் திறன் பற்றியும், புதிய கல்விக்கொள்கை பற்றியும் மிகவும் தெளிவாக கூறினார். இது மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.



# MALANKARA SCHOOL OF COMMERCE

**Mariagiri, Kulapuram**

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் சமூக பணிமையான மிட்ஸ் நிறுவனத்தின் கீழ் இயங்கிக்கொணடிருக்கும் "Malankara School of Commerce" (கன்னியாகுமரி சமுதாய கல்லூரி) கல்லூரியானது தற்போது பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான கோடை கால கணினி பயிற்சி வகுப்பு நடத்தவுள்ளது. இந்த வகுப்பு மே மாதம் 2-ம் தேதி முதல் மே மாதம் 31-ம் தேதி வரை வார நாட்களில் காலை 10.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை நடைபெறும். இதில் கணினியின் அடிப்படை செயலிகளான MS Office மற்றும் Tally குறித்து தகுதிவாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சி கொடுக்கப்படும், இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்த விரும்பும் மாணவர்கள் ஏப்ரல் 24-ம் தேதிக்கு முன் கல்லூரி அலுவலகத்தை தொடர்பு கொண்டு தங்கள் பெயரை பதிவுசெய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

***தொடர்புகொள்ள வேண்டிய முகவரி மற்றும் எண்கள் :***

**மலங்கரை ஸ்கூல் ஆப் காமர்ஸ்**

மரியாகிரி, குளப்புறம் அஞ்சல்.

அலுவலக தொடர்பு எண் :

9489658034, 9488375058, 9486658038

*தலைவர் தொடர்பு எண் :*

(அருட்தந்தை ஜாண் குமார்) : 9486177900

(அருட்தந்தை அஜீஷ் குமார்) : 8012828034

# HOM - SPECIAL SCHOOL FOR THE MENTALLY RETARDED

**திறமைத் திருவிழா – ’23 கொண்டாட்டம்**

மார்த்தாண்டம் மறைமாவட்ட நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வரும் குழித்துறை ஹோம் - அறிவுசார் குறைபாடுடையோருக்கான சிறப்புப் பள்ளியில் 20.04.2023 வியாழக்கிழமை காலை 11 மணியளில் திறமைத் திருவிழா நடைபெற்றது. இந்நிகழ்விற்கு ஹோம் சிறப்புப் பள்ளி தாளாளர் அருட்தந்தை இராபர்ட் அவர்கள் தலைமை தாங்கி தலைமையுரையாற்றினார்கள். சிறப்புப் பள்ளி தலைமையாசிரியர் திரு. டென்னிஸ் அவர்கள் விழா அறிமுக உரையோடு அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக ம.சி.க பள்ளிகளின் தாளாளர் பேரருட்தந்தை தேவதாஸ் அவர்கள் கலந்துக்கொண்டு சிறப்புரையாற்றி, சிறப்புக் குழந்தைகள் அவர்தம் பெற்றோர்கள் மற்றும் சிறப்புப் பள்ளி பணியாளர்களுக்காக நடத்தப்பட்ட திறமைத் திருவிழா - ’23 நிகழ்வை துவக்கி வைத்தார்கள். திறமைத் திருவிழா - ’23-யை இன்பென்ட் நடனப்பள்ளி இயக்குநர் மாஸ்டர். அருள் அவர்கள் அனைத்து விளையாட்டுகளையும் ஒருங்கிணைத்து வழிநடத்தினார்கள். திறமைத் திருவிழா -’23 விளையாட்டுப் போட்டிகள் மூன்று அரங்குகளில் நடைபெற்றது. முதல் அரங்கில் சாக்குப் பை ஓட்டம், ஜிக் ஜாக் ஓட்டம், நாற்காலி சுற்றுதல், வடம் இழுத்தல், பாட்டிலில் நீர் நிரப்புதல் போன்ற விளையாட்டுகளும் இரண்டாவது அரங்கில் பக்கெட்டினுள் நாணயம் போடுதல், பாட்டில் கலைத்தல், பலூண் ஊதி உடைத்தல், செங்கல்



மேல் நடத்தல், வடை கடித்தல் போன்ற விளையாட்டுகளும் மூன்றாவது அரங்கில் சீட்டு குலுக்கல் திறமை வெளிபடுத்துதல், நம்பிக்கை விளையாட்டு, கண்ணாடி விளையாட்டு, கப் அடுக்குதல், மெழுகு திரி கொழுத்துவது போன்ற விளையாட்டு போட்டிகளும் நடைபெற்றது. விளையாட்டுகளில் நடுவர்களாக இன்பென்ட் நடனப் பள்ளி நடன ஆசிரியைகள் பங்கேற்று போட்டியாளர்களை உற்சாகப்படுத்தி மதிப்பெண் வழங்கினார்கள். முன்னதாக போட்டியாளர்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டது. போட்டியாளர்கள் டோக்கன் காண்பித்து ஒவ்வொரு அரங்கிலும் நடைபெறும் விளையாட்டுகளில் பங்கேற்க வேண்டும். இந்நிகழ்வை சிறப்பாசிரியர் திருமதி. ஜீவிதா அவர்கள் தொகுத்து வழங்கி நன்றியுரை கூறினார்கள். சிறப்புக் குழந்தைகள், பெற்றோர்கள், உறவினர்கள், பணியாளர்கள் என 200-க்கும் மேற்பட்டோர் கலந்துக்கொண்டு தங்களது திறமைகளை வெளிபடுத்தி மகிழ்ந்தனர். இறுதியாக நாட்டுப்பண் பாடலுடன் திறமைத் திருவிழா -’23 முடிவு பெற்றது. மாஸ்டர் அருள் அவர்கள் திறமைத் திருவிழா -’23 கொண்டாட்ட நிகழ்வை மிகவும் நன்முறையில் திறம்பட வழிநடத்தினார்கள். அனைவரையும் உற்சாகப்படுத்தி மகிழ வைத்தார்கள். குறிப்பாக இதில் பங்கேற்ற சிறப்புக் குழந்தைகளும் பெற்றோர்களும் மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மறைவட்ட செய்திகள்

## குலசேகரம் மறைவட்டம்

மாத்தார் புனித சூசையப்பர் ஆலயத்தில் புனரமைக்கப்பட்ட பலிபீடத்தை மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் அவர்கள் 01.04.2023 அன்று அர்ச்சித்தார்கள். இந்நிகழ்வுகளை பங்குதந்தையோடு இணைந்து பங்குமக்கள் சிறப்பித்தார்கள்.

பாஸ்கா விழாவை முன்னிட்டு, மேதகு ஆயர் அவர்கள் பாதம் கழுவுதல் திருச்சடங்கு குலசேகரம் மறைவட்டத்தில் மாத்தார் பங்கில் வைத்து நடத்தினார்கள். இத்திருச்சடங்கில் மறைவட்ட பங்குகளிலிருந்து பிரதிநிதிகளாக பலர் கலந்துகொண்டனர். மேதகு ஆயர் அவர்கள் பாஸ்கா வியாழன் திருச்சடங்கையும், திருப்பலியையும் முன்னின்று நடத்தி இறைமக்களுக்கு ஆசி வழங்கினார்கள்.

### திருமண ஆயத்தப்பயிற்சி

**மே** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 19, 20 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



# ஆயரின் ஏப்ரல் மாத நிகழ்வுகள்



- 1 ➢ காட்டுவிளை ஆலயத்தின் புது சமூக நலக்கூடத்தை அர்ச்சித்து அருளினார்.
- 2 ➢ மாத்தார் ஆலயத்தின் புனரமைக்கப்பட்ட பலிபீடத்தை அர்ச்சித்து அருளினார்.
- 3 ➢ ஓசானா திருச்சடங்குகள் மற்றும் திருப்பலியை மார்த்தாண்டம் பேராலயத்தில் நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 6 ➢ மாத்தார் ஆலயத்தில் பாதங்கழுவுதல் திருச்சடங்குகள் மற்றும் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 6 ➢ சவுதி அரேபியா நாட்டில் வசித்து வரும் கிறிஸ்தவர்களுக்கு புனித வெள்ளி சிறப்பு செய்தியை zoom வழியாக வழங்கினார்.
- 7 ➢ செல்லங்கோணம் ஆலயத்தில் புனித வெள்ளி திருச்சடங்குகள் நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 8 ➢ செல்லங்கோணம் ஆலயத்தில் உயிர்ப்பு திருச்சடங்குகள் மற்றும் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.
- 10 ➢ அஞ்சுகூட்டுவிளை புனித பேதுரு ஆலயத்தில் வைத்து நடைபெற்ற கிறிஸ்தவ ஐக்கிய பேரவை கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

11 ➢ மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவை முன்னிட்டு வெள்ளெலும்பு ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி பாதயாத்திரையை துவங்கி வைத்தார்.

11 ➢ மலங்கரை கத்தோலிக்க கலைகல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் கலந்துக் கொண்டார்.

12 ➢ மார் எப்ரேம் ஆண்டகையின் விண்ணக வாழ்வின் இருபத்தாறாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மார்த்தாண்டம் பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

12 ➢ அம்பிலிகோணம் பள்ளி ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.

13 ➢ மலங்கரை கத்தோலிக்க கலைகல்லூரியின் ஜூபிலி நிறைவு விழாவில் கலந்துக் கொண்டு சிறப்பு விருந்தினர்களை வாழ்த்தி வரவேற்றார்.

13 ➢ சாத்தான்கோடு பள்ளி ஆண்டு விழாவிற்கு தலைமைத் தாங்கினார்.

14 ➢ கிறிஸ்தவ ஐக்கிய பேரவை சார்பில் அழகியமண்டபத்தில் வைத்து நடைபெற்ற பெண்கள் தின கொண்டாட்டத்தில் கலந்துக் கொண்டார்.

15 ➢ மலங்கரை கத்தோலிக்க கலைகல்லூரி வளாகத்தில் வைத்து ஐந்து திருத்தொண்டர்களுக்கு குருப்பட்டம் வழங்கினார்.

16 ➢ அருட்தந்தை சில்ஜின், அனிஸ், அஜேஸ், பிபின்ராஜ் ஆகியோரின் முதல் நன்றித் திருப்பலியில் கலந்துக் கொண்டு மறையுரையாற்றினார்.

17 ➢ அருட்தந்தை ஸ்டீபன் அவர்களின் முதல் நன்றித் திருப்பலியில் கலந்துக் கொண்டு மறையுரையாற்றினார்.

18 ➢ அருட்தந்தை சில்ஜின் அவர்களின் இலத்தீன் முறையிலான முதல் நன்றித் திருப்பலியில் கலந்துக் கொண்டு மறையுரையாற்றினார்.

19 ➢ பட்டம் மார் இவானியோஸ் சிற்றாலயத்தில் புது குருக்களுடன் இணைந்து திருப்பலி நிறைவேற்றினார்.



21 ➢ கன்னியாகுமரியில் வைத்து கிறிஸ்து அனுசார துறவற அருட்சகோதரிகளுக்கு சிறப்பு வகுப்பை வழிநடத்தினார்.

21 ➢ மார் எப்ரேம் இளங்குருமட தின விழாவில் தலைமைத் தாங்கினார்.

22 ➢ கன்னியாகுமரியில் நடைபெற்ற இளையோர் வழிகாட்டுதல் முகாமில் சிறப்புரையாற்றினார்.

22 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற AYF கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

22 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற Kolping கூடுகைக்கு தலைமைத் தாங்கினார்.

23 ➢ பெரிங்ஙனாடு ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

23 ➢ மங்காடு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

25 ➢ பட்டம் பேராலயத்தில் வைத்து நடைபெற்ற கோர் எப்பிஸ்கோப்பா பதவி வழங்கும் நிகழ்வில் கலந்துக்கொண்டார்.

25 ➢ பார்வதிபுரத்தில் நடைபெற்ற சிறுபான்மை கூட்டமைப்பு கூடுகையில் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு சிறப்புரையாற்றினார்.

29 ➢ மேக்கோடு புனித சூசையப்பர் அருட்சகோதரிகளின் துறவற இல்லத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

29 ➢ குலசேகரம் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

30 ➢ பாறசாலை மறைமாவட்டம் சாரோட்டுக்கோணம் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

# Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.05.2023 | Monday | 7.30 am | Holy Mass<br>Holy Mass | Vazhakuzhy<br>Adaikakuzhy |
| 02-03.05.'23 | Tuesday -<br>Wednesday | | | Chennai |
| 04.05.2023 | Thursday | 4.00 pm | Commemoration of Ab.<br>Powathil | Padanthalumoodu |
| 05.05.2023 | Friday | 11.00 am | Headmaster's Meeting<br>Holy Mass | Bishop's House<br>Kannaravilai |
| 06.05.2023 | Saturday | | Career Guidance Class<br>Start Up Programme | MIDS<br>Mar Ephream College |
| 07.05.2023 | Sunday | 7.00 am<br>2.00 pm<br>6.00 pm | Holy Mass<br>Holy Mass<br>Silver Jubilee Celebration | Annakarai<br>Kirathoor<br>Christhuvilagam |
| 08.05.2023 | Monday | 3.30 pm | UCC | Bishop's House |
| 09.05.2023 | Tuesday | 9.30 am | Priest's Retreat | Bishop's House |
| 11.05.2023 | Thursday | | Holy Mass | Kidarakuzhy |
| 12.05.2023 | Friday | 6.30 am | Holy Mass<br>Flag Pole Blessing<br>Knocking Door | DM Convent Mtm<br>Peruvilai<br>DM Convent Mtm |
| 13.05.2023 | Saturday | | First Profession | DM Convent Mtm |



| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 14.05.2023 | Sunday | 7.00 am<br>2.00 pm<br>4.30 pm | Holy Mass<br>Laity Day<br>Holy Mass | Konam<br>Mar Ephream<br>Vazhagam<br>George Nagar |
| 15.05.2023 | Monday | 5.00 pm | Holy Mass | Arumanai |
| 16.05.2023 | Tuesday | 4.00 pm | Seminary Commission<br>Meeting | Trivandrum |
| 17.05.2023 | Wednesday | 9.30 am | Holy Mass | Chenamvilai |
| 18.05.2023 | Thursday | 5.00 pm | Holy Mass | Pilankalai |
| 19.05.2023 | Friday | | Holy Mass | Pinkulam |
| 20.05.2023 | Saturday | 8.00 am<br>6.00 pm | Confering Corepiscopo<br>Preaching | Cathedral<br>Trichy |
| 21.05.2023 | Sunday | | Preaching | Trichy |
| 23.05.2023 | Tuesday | 5.00 pm | Holy Mass $ Shrine Blessing | Cherotukonam |
| 24.05.2023 | Wednesday | 6.30am | Diaconate $ Vestition | Minor Seminary |
| 25.05.2023 | Thursday | 6.30am | Minor Orders | Minor Seminary |
| 26-28.05.'23 | Friday-Sunday | | Diocesan Convention | Mar Ephream<br>Vazhagam |
| 27.05.2023 | Saturday | 9.30 am | Retreat for Teachers | Mar Ephream<br>Vazhagam |
| 28.05.2023 | Sunday | 9.00am | Holy Mass | Cherupallor |



## புது குருக்களுக்கு வாழ்த்துக்கள்...

# கோர்எப்பிஸ்கோப்பா பதவி பெயர் வழங்குதல்

2023, மே மாதம் 20-ம் தியதி



பேரருட்தந்தை S. வற்கீஸ்



பேரருட்தந்தை பிரேம் குமார்

## மார் எஃப்ரேம் ஆண்டகையின் நினைவு







